ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2015.10.30 |

**2015 ஒத்தோபரில் பணவீக்கம்**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2006/07=100) மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான, 2015 ஒத்தோபரின் பணவீக்கம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட -0.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாக, 2014 செத்தெம்பரிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட கீழ்நோக்கிய நிருவாக ரீதியான விலைத் திருத்தங்களின் உயர்ந்த தளத் தாக்கம் அகற்றப்பட்டமையே முக்கிய காரணமாகும். உணவு வகையில் பல முக்கிய விடயங்களின் அண்மைய விலை அதிகரிப்பும் ஒத்தோபரில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பணவீக்கம் அதிகரிப்பதற்கு பங்களித்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் 2015 செத்தெம்பரில் பதிவு செய்யப்பட்டவாறு 0.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2015 செத்தெம்பரிலிருந்து ஒத்தோபரிற்கு 0.4 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். அரிசி, உடன்மீன், கருவாடு, மாசிக்கருவாடு, சிலவகைப் பழவர்க்கங்கள், காய்கறிகளில் பெரும்பாலான வகைகள், உருளைக்கிழங்கு, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், செத்தல் மிளகாய், எலுமிச்சம் பழம் மற்றும் சீனி என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் அதிகரித்தன. எனினும், கோழி இறைச்சி, முட்டை, தேங்காய் மற்றும் பப்பாளிப்பழம் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. உணவல்லா வகையில் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய பொருள்களின் துணை வகையின் விலைகள் அதிகரித்தன. ஆடைகள் மற்றும் காலணி வகைகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. மற்றைய அனைத்துத் துணை வகைகளான தளபாடங்கள், வீட்டுப்பொருட்கள், சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு உபயோகப் பேணல் பொருட்கள்; சுகாதாரம்; போக்குவரத்து; தொடர்பூட்டல்; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; கல்வி; மற்றும் பல்லினப் பொருட்கள் மற்றும் பணிகள் இம்மாத காலத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டன.